# இந்து

The Hindu

2020- 01


## விளைவுகளின் செல்வாக்கிற்குட்படாமல் கடமையாற்றல்



நன்நோக்கிற்காக பொதுமைப்படுத்தப்பட்ட பண்புள்ள நேரிய பாதையில் முன்னகரும் எந்தவொரு நிறுவனத்தினது தன்னார்வலர்களுக்கு கிடைக்கும் மனத் திருப்தியானது பெறுமதி வாய்ந்ததாகவே இருக்கும். அதற்கு நிகராக அவர்கள் சந்திக்கும் நெருக்கடிகளும் தீவிரத்தன்மையுடையதாகவே இருக்கும். யாழ் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கமும் இப் பொது விதிக்கு அமைவாகவே செயற்படுகிறது.

இளையவர்களை சமகால சவால்களுக்கு முகம் கொடுத்து, அவர் தம் வாழ்க்கை முறையை வளமாக்குவதற்கு, பொருத்தமான கல்வியூட்டலைச் செய்வதனூடாக தமிழர் தம் தனித்துவம் பேணும் நோக்கை அடிநாதமாக கொண்டே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. மக்களிடம் பெறப்பட்ட பிடியரிசி பணத்தை மூலதனமாக உள்வாங்கி உருவாக்கப்பட்டு, இன்று வியாபகம் எடுத்து நிற்கும் கல்விப் பெரும் விருட்சமே தமிழர் தலை நிமிர் கழகம் ஆகும்.

திறனும் ஆற்றலும் இருந்தும், தரமான கல்வியைப் பெறுவதற்கு பொருளாதார காரணி தடையாக இருக்கும் பட்சத்தில், அதனை நிவர்த்தி செய்து வளமான கல்விக்கு தளம் அமைத்துக் கொடுக்கும் தன் அடிப்படைப் பண்பை இந்துக்கல்லூரி சமூகம் முன்னுரிமை கொடுத்துப் பேணி வருவது இக் கல்லூரிக்கேயுரிய சிறப்பியல்பாகும்.

இதற்கு உறுதுணையாக பலம் சேர்க்கும் வகையில் தமிழர் தம் கல்வியையும் சுதேசியத்தையும் பேணவும், பாதுகாக்கவும், வளர்க்கவும் காலத்தால் நிறுவனமயப்படுத்தப்பட்ட, இயங்கு திறனுடைய அமைப்பாக யாழ் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் இயங்கி வருகிறது.

கடந்த காலத்தில் யாழ் இந்துக்கல்லூரியினதும் பழையமாணவர் சங்கத்தினதும் அடிப்படை கோட்பாடுகளுக்கும், அதையொட்டிய செயற்பாடுகளுக்கும் பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட போதும், இத் தாய்ச் சங்கமானது தனது வழித்தடம் மாறாமலே பயணித்தது.

தொடர்ச்சி 4ம் பக்கத்தில்...........

www.jhcobajaffna.com secretary@jhcobajaffna.com 021 221 1665

## மாணவர்களுக்கான திசைப்படுத்தல் செயலமர்வு

அண்மையில் கா.பொ.த(சா-த) தோற்றிய மாணவர்களுக்கான திசைப்படுத்தல் செயலமர்வு கல்லூரி அதிபரின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகிறது. இந்த செயலமர்வில் எமது நிர்வாக குழுவினரும் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.








## புனரமைப்புச் செய்யப்பட்ட விடுதி பயன்பாட்டிற்காக கையளிப்பு

எமது சங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய முன்னாள் அமைச்சர் மனோகணேசன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட எமது மாணவர் விடுதி திருத்த வேலைகள் இடம்பெற்றது. திருத்த வேலைகள் நிறைவடைந்த நிலையில் 03.02.2020 அன்று மாணவர் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது. முன்னாள் அமைச்சர் மனோகணேசன் அவர்களுக்கு எமது சங்கம் சார்பான மனமார்ந்த நன்றிகள்.





# இந்துவின் இரவு 2019

இந்துவின் இரவு 2019 நிகழ்வு குடும்பத்தினர் சகிதம் பங்குபெறும் கலைநிகழ்வாகவே இம் முறையும் நடைபெற்றது. இந்த நிகழ்வானது 25.12.2020 அன்று கிறீன் கிராஸ் நட்சத்திர விடுதியில் நடைபெற்றது. கலந்துகொண்ட அனைவரும் மிக மகிழ்வான மாலைப்பொழுதாகவும் நேரம் கழிந்தது கூட தெரியாத சிறப்பான நிகழ்வு ஒழுங்கமைப்பு எனவும் பாராட்டுத்








## விளைவுகளின் செல்வாக்கிற்குட்படாமல் கடமையாற்றல் (1ம் பக்க தொடர்ச்சி......)

சூரியன் அஸ்தமிக்காத ஆளுகைப்பரப்பைக் கொண்டிருந்த பிரித்தானியா சாம்ராட்சம் எம் மண்ணில் கோலோச்சிய காலத்திலும், தென்னாசிய வல்லரசு எம்மண்ணில் வலிந்து கால்பதித்திருந்த நேரத்திலும், தமிழர்களின் தனித்துவத்தையும் கல்விப்பாரம்பரியத்தையும், பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டு முறைமைக் குணாம்சமானது இந்துக்கல்லூரியின் புதல்வர்களுக்கே உரிய சிறப்பம்சமாகும். இது காலநீட்சி கொண்டதாகவும், தலைமுறைகளுக்கு கடத்தப்படும் இயல்புள்ளதாகவும் இருப்பது இங்கு பதிவிடப்படுகின்றது.

இதன் ஒரு அம்சமாகவே இலவசக் கல்விக் கோட்பாடு நடைமுறை யதார்த்ததில் கேள்விக்குள்ளாக்கப்பட்ட போது அதனை சீர் செய்யும் முகமாக யாழ் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் துணிந்து துரிதமாகச் செயற்பட்டு வெற்றியும் கண்டது. இதனை சமூக அக்கறையுள்ள கல்வியாளர்கள் அங்கீகரித்து பாராட்டினையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

விடுதி புனரமைப்பு, மாணவர்களுக்கான நீச்சல் பயிற்சி, திட்டமிடல் குழு நியமனம், சர்வதேச சதுரங்க போட்டிக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டமை சட்ட ஆலோசனை குழு உருவாக்கம் வெள்ள அனர்த்த நிவாரணம் வழங்கப்பட்டமை குடும்பத்தினருடன் கல்லூரி நண்பர்களுடனும் மகிழ்வான பொழுதைக் கழிக்க இந்துக்களின் இரவு ஒன்று கூடல் நிகழ்வு நடாத்தப்பட்டமை Toastmaster Master club உருவாக்கப்பட்டமை, கல்லூரிக்கான கண்காணிப்பு கமாரக்களுக்கான நிதியுதவிகளை வழங்கியமை ,கிளைச்சங்கங்களுடன் முடிந்தளவு நட்புறவுகளை பேண முயற்சித்தமை, நீண்டகலமாக கல்லூரிக்கு தீர்க்க முடியாதாக இருந்த பல சிக்கல்களை உதாரணமாக மைதான விரிவாக்கம் போன்றவற்றில் எமது ஆட்சிக் குழுக் காலத்தில் சிறிது பங்களிப்பு செய்ய கிடைத்தமை மகிழ்வழிக்கிறது.

மேற்குறிப்பிட்ட உதாரணங்களை செயற்படுத்தும் போது மனித குலத்திற்கே பொதுவான, இயல்பான வலிந்து மேற்கொள்ளப்பட்ட இடையூறுகளையும் பொருத்தமற்ற விமர்சனங்களையும் தாய்ச்சங்கமானது சந்தித்தது. அவ்வேளை நியாயமான பங்களிப்பிற்கு முன்வருபவர்கள் என கருதப்பட்ட பொருத்தமானவர்களின் மௌனம் நெருடலை ஏற்படுத்தியது. எனினும் அது ஆச்சரியம் அளிக்கவில்லை. வெளிப்படையான தடைகள் வரும் போது அதனைத் தகர்க்க ஒரு சிலரே முன்வருவார்கள் என்பது நூற்றாண்டு வரலாற்றில் ஆங்காங்கே உதாரண ஒளிர்வுகளாக காணப்படுகின்றன.

எவ்வாறு இருந்த போதும் தாய்ச்சங்கமானது தான் கொண்ட பற்றுறுதியின் காரணமாக அழுத்தங்களுக்கு வளைந்து கொடுக்காது நெருக்கடிகளுக்குள் நொருங்கிப்போகாது, சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் கையாண்டு தமிழ் மாணவர்களின் நேர்த்தியான கல்விச் செயற்பாட்டிற்கு பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கியதையிட்டு தலைநிமிர்ந்து கொள்கிறது. புதிய இளம் தகுதியான தலைமையின் தெரிவின் ஊடாக இயற்கை தன் பாதையை மீண்டும் செப்பனிட்டுக் கொண்டது.

2018.04.22 அன்று யாழ் இந்துக்கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்ட நிகழ்விற்கு பலநூறு இந்துவின் பழைய மாணவர்கள் ஆலை என திரண்டு வந்து பங்காற்றியிருந்தனர். இதுவொரு எமது சங்க வரலாற்றில் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இவ் உத்வேகமூட்டும் நிகழ்வினூடாக யாழ் இந்துக்கல்லூரி பழையமாணவர்களின் தாய்ச்சங்கத்தின் இருப்பும் அடையாளமும் செயற்பாடுகளும் கேள்விக்கு அப்பாற்பட்ட வகையில் உறுதிப்படுத்தப்பட்டது. அன்று என்னிடம் கையளிக்கப்பட்ட பொறுப்பினை ஏற்றுக்கொண்டதிற்கு அமைய மனச்சாட்சிப்படி விளைவுகளின் செல்வாக்கிற்கு உட்படாமல் கடமையாற்றினேன் என்பதை தெரிவிப்பதில் மனநிறைவு அடைகிறேன்.

இதற்கு வழிகாட்டிய என் முன்னவர்களுக்கு மனதினுள் மௌனமான மரியாதை செலுத்தி மறைமுகமாகவும் நேரடியாகவும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைத்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். யாழ் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் இவ்வாண்டு ஆட்சிக்குழுவானது யாழ்ப்பாணத்தின் மூளை என கருதப்படும் யாழ் பல்கலைக்கழக கல்விமான்களை பெருமளவில் கொண்டிருக்கும் புதிய ஆட்சிக்குழுவிடம் கையளிப்பதில் மனநிறைவடைகிறேன்.

சுந்தரலிங்கம் தனேஸ்குமார்
தலைவர்

**எவ்விடமேகினும் எத்துயர் நேரினும் எம் அன்னை நின் நலம் மறவோம்.**